தேனி, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: முனைவர்.தி.அழகுநாகேந்திரன், மு.அ (விவ)

எண். ஆ3/3207/2021 நாள். 13.10.2021

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ச.ராஜ்குமார் (பிணையம்) இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை 1 அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (க்யு1), நாள்.26.02.2021.

2 சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி6/103144/2018, நாள்.26.07.2019.

3. சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநி2/8729/2019, 21.08.2019.

4. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி1/149005/2019, நாள்.21.04.2021.

5 சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி5/12329/2021, நாள்.06.05.2021.

Rajkumar Depo Manager/Sammpm

*******

ஆணை

பார்வை 2,3ல் காணும் செயல்முறை ஆணையின்படி தேனி வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் கட்டுப்பாட்டில் சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விற்பனை உதவியாளர் ஆக பணிபுரிந்த போது 15.08.2011 அன்று இயற்கை எய்திய மா. சந்திரசேகர் அவர்களின் வாரிசு/ மகன் திரு.ச.ராஜ்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் கட்டுப்பாட்டில் மானாமதுரை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணி நியமனம் வழங்கப்பட்டு 28.08.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பார்வை 5–ல் காணும் செயல்முறை ஆணையின்படி தனியர் விருப்ப மாறுதலில் இம்மாவட்டத்தில் உள்ள சின்னமனூர் வட்டாரம், துணை வேளாண்மை விரிவாக்க மையம், சங்கராபுரம் அலுவலகத்தில் 01.07.2021 முற்பகல் பணியேற்றுள்ளார்.

மேலும் பார்வை 1–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 4–ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தனியர் கருணை அடிப்படையில் அரசுப்பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவர் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிகாலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.



Scanned with CamScanner

தனியர் மேற்காணும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டுமெனவும் காலதாமதமாக பயிற்சி நிறைவு செய்தால் அரசிடமிருந்து விதி தள்ர்வு பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் முடித்ததற்கான ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தனியருக்கு தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிடப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் எனவும் ஆணையிடப்படுகிறது.

ஒம்/-தி.அழகுநாகேந்திரன்
வேளாண்மை இணை இயக்குநர்
தேனி

பெறுநர்:

திரு.ச.ராஜ்குமார் (பிணையம்)
துணை வேளாண்மை விரிவாக்க மையம்
சங்கராபுரம், சின்னமனூர் வட்டாரம்
வழி&நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், சின்னமனூர்,

நகல். வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
பணிந்து அனுப்பப்படுகிறது – (பிரிவு – அநிபி1)
நகல் வேளாண்மை இணை இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு தகவலுக்காக
நகல் வோளண்மை உதவி இயக்குநர். மானாமதுரை,
சிவகங்கை – தகவலுக்காக
நகல். தணிக்கை பிரிவு இவ்வலுவலகம்
நகல். இருப்பு கோப்பு , பணிப்பதிவேடு, உபரி

//ஆணைப்படி//

ஆட்சி அலுவலர்

21/10/21



Scanned with CamScanner